**வேத வசனத்தைக் கேட்ப்பது எப்படி**?

**வாசிக்க**: **ரோமர்** 10:17 **யாக்கோபு** 1:19

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்

செல்வத்துள் எல்லாம் தலை. – திருக்குறள்.

கேட்கிறதற்கு காதுள்ளவன் கேட்கக்கடவன். லூக்கா 8:8

இந்தத் தீர்க்கதரிசன வசனங்களை வாசிக்கிறவனும், கேட்கிறவர்களும், இதில் எழுதியிருக்கிறவைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும் பாக்கியவான்கள். வெளி1:3

பொதுவாக, நாம் கேட்பதில் 95 சதவீதத்தை 3 நாட்களுக்குள் மறந்துவிடுவோம். எனவே நமது கேட்கும் திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். எப்படி மேம்படுத்திக் கொள்வது?

நீங்கள் வேத வசனத்தைக் கேட்க ஆர்வமாயிருங்கள்: சங்கீதம் 19:7,10

எந்த ஒரு காரியமாக இருந்தாலும் ஆர்வத்தோடு செய்தால்தான் சிறப்பானதாக இருக்கும். எதைச் செய்தாலும் முழு ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். பாடல்களை எவ்வளவு ஆர்வத்தோடு ஆசையாகக் கேட்கிறோமோ அதேப்போல வேத வசனத்தைக் கேட்க ஆர்வமாகவும், ஆசையாகவும் இருங்கள்.

நீங்கள் வேத வசனத்தைக் கேட்கும்போது குறிப்பெடுங்கள்: எபிரெயர் 2:1

உங்களுக்குப் பிடித்த வார்த்தைகள், பிடித்த வசனங்கள், பிடித்த கருத்துக்களைக் குறிப்பெடுங்கள். ஒருமுறை எழுதுவது 10 முறை படித்ததுக்கு சமமானது. ஆக வேத வசனத்தைக் கேட்கும்போது குறிப்பெடுங்கள்.

நீங்கள் வேத வசனம் கேட்பதின்படி செயல்படுங்கள்: வெளி 1:3 யாக்கோபு 1:22 நீங்கள் என்ன கேட்கிறீர்களோ, என்ன பிடித்திருக்கிறது என்று குறிப்பெடுத்திருக்கிறீர்களோ, அதை செயல்படுத்துங்கள். நீங்கள் வேத வசனத்தைச் செயல்படுத்த செயல்படுத்த கிறிஸ்துவோடு உள்ள உங்கள் உறவு பெலப்படும். எனவே, நீங்கள் கேட்ட வேத வசனத்தைச் செயல்படுத்துங்கள்.

வசனத்தை கேட்டவர்கள் இரட்சிக்கப்பட்டார்கள், சுகமாக்கப்பட்டார்கள், விடுவிக்கப்பட்டார்கள், பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப்பட்டார்கள், ஆசீர்வாதத்தால் நிரப்பப்பட்டார்கள். எனவே, நீங்கள் வேத வசனத்தைக் கேளுங்கள்,

கேளுங்கள், கேட்டுக்கிட்டே இருங்கள்!!!

**கேள்விகள்**:

1. தேவன் நமக்களித்த மிகப் பெரிய பொக்கிஷம் எது?

2. வேத வசனத்தைக் கேட்பது எப்படி?